<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 96/2020 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 12 P.W.6 |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | ஓம் பிரகாஷ் | தொழில் | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | | ஜாதி | |
| கிராமம் | : | | இனம் | |
| தாலூக்கா | : | | வயது | |
| Mail ID | : | | Mobile No. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 22.01.2026

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது கரூர் மாவட்டம் வேலாயுத பாளையம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். இதற்கு முன்பு உடுமலை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது கடந்த 29.04.2019 ம் தேதியன்று தலைமை காவலர் மகாவிஷ்ணு நிலைய அலுவலில் இருந்த போது உடுமலை கோகுல் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சையில் இருந்த ஸ்ரீரங்கன் இருந்தவரை விசாரித்த போது அவர் மயக்க நிலையிலும் வாக்குமூலம் கொடுக்க இயலாத சூழ்நிலையில் இருந்தததாலும் விபத்தை நேரில பார்த்த அரவிந்தன் த/பெ ஆறுமுகம் என்பவர் நேரில் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண் 233/2019 ச/பி 279,337 இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அசலையும் புகாரினையும் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். பின்னர் ஒரு நகலை புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் ரவி அவர்களின் பார்வைக்கு வைத்தார்.
2. பின்னர் உதவி ஆய்வாளர் ரவி அன்றைய தினமே 18.00 மணிக்கு

வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் நாச்சிமுத்து, சக்திவேல் ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடமும் பார்வை மகசரும் தயார் செய்து சாட்சி கையொப்பம் பெற்றார். **மாதிரி வரைபடம் அசா.ஆ.4 என குறியீடு செய்யப்படுகிறது.**

3. பின்னர் சாட்சிகள் அரவிந்தன், கிருஷ்ணவேணி, நாச்சிமுத்து ஆகியோரை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்த நிலையில் மேல் சிசிக்சைக்காக சென்ற வழக்கில் காயம்பட்ட ஸ்ரீரங்கன் என்பவர் 07.05.2019 ம் தேதி சிகிச்சை கோவை PSG மருத்துவமனையிலிருந்து கோவை சிஎம்சி மருத்துவமனையில் மாலை 4.20 மணியளவில் சிகிச்சை பலனின்றி இறந்து போனார் என்று கிடைத்த தகவலின் பேரில் உதவி ஆய்வாளர் வழக்கின் சட்டப்பிரிவுகளை 279,337 இதசவிலிருந்து 279, 304(A) இதசவாக சட்டப்பிரிவு மாறுதல் செயது மேல்விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசா.ஆ .5 என குறியீடு செய்யப்படுகிறது.**
4. வழக்கில இறந்து போன ஸ்ரீரங்கன் என்பவரின் பிரேதத்தை பஞ்சாயத்தார் சாட்சிகள் சுப்பிரமணியன், பழனிசாமி, வேலுசாமி, நாகமாணிக்கம் , ஆகியோர் முன்னிலையில் பிரேத விசாரணை முடித்து பிரேத பரிசோதனைக்காக பெண் காவலர் குமுதவள்ளி நாச்சியார் என்பவர் வசம் ஒப்படத்தார். **பிரேத விசாரணை அறிக்கை அசா.ஆ.6 என குறியீடு செய்யப்படுகிறது.**
5. பின்னர் மேல் விசாரணைக்காக பொறுப்பேற்ற கொண்ட நான் வழக்கு கோப்பினை பரிசீலித்து உதவி ஆய்வாளர் அவர்கள் விசாரித்த சாட்சிளை நான் விசாரித்த போது புதிய சங்கதிகள் எதுவும் குறிப்பிடாததால் நான் தனியாக வா்க்குமூலம் பதிவு செய்யவில்லை. பின்னர் சாட்சிகள் கனகரததினன்ம சிவக்குமார் ஆகயோரை விசாரித்தும் அரவிந்தன் என்பவரையும் விசாரித்து மறு வாக்குமுலம் பதிவு செய்தேன் பின்னர் 10.05.2019 ம் தேதி நிலையம் ஆஜரான எதிரி சியாம்லாள் த/பெ சிவராம் என்பவரை கைது செய்து பின்னர் தக்க இருநபர் ஜாமினில் விடுவித்தேன்.
6. பின்னர் விபத்து ஏற்படுத்திய KL 17 K 6491 அசோக் லைலேண்ட டூரிஸ்ட் பஸ் வாகனத்தை ஆய்வுக்கு உட்படுத்தி மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை பெற்று மோட்டார் வாகன ஆய்வாளர் முத்துக்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். KL 17 K 6491 **வாகனத்தின் ஆய்வறிக்கை அசா.ஆ .7 என குறியீடு செய்யப்படுகிறது.**

7. பின்னர் காயம் பட்ட நபருக்கு காயம் பட்ட ஸ்ரீரங்கன் என்பவருக்கு கோகுல் பாலிகிளினிக் மருத்துவமனை மருத்துவர் வாசுதேவன் வாசுதேவன் என்பவரை விசாரித்தும் சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **பின்னர் இறந்து போன** ஸ்ரீரங்கன் பிரேதத்தை பரிசோதனை செய்த கோவை சிஎம்சி மருத்துவர் நிம்மி சிவக்குமார் என்பவரை விசாரித்த பிரேத அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **பிரேத பரிசோதனை அறிக்கை அசா.ஆ.8 எனகுறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் முதல் தகவல் அறிககை பதிவு செய்த தலைமை காவலர் மகாவிஷ்ணு என்பவரை விசாரித்து வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது இதச பிரிவு 279, 304(A) ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட புகார் ஆனது அரவிந்தன் என்பவர் தனக்கு பெரியப்பா ரோட்டின் ஓரத்தில் நடந்து வந்து கொண்டிருந்தார் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் அரவிந்தன் என்பவர் கொடுத்த 161 மறுவாக்குமூலத்தில் மேற்கில் இருந்து கிழக்காக ரோட்டின் ஓரத்தில் நடந்து வந்து கொண்டிருந்தது குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதற்கட்ட புலன் விசாரணையிலும் அடிபட்ட நபர் ரோட்டின் ஓரத்தில் நடந்து கொண்டு வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.
2. எந்த ஒரு சாட்சியமும் விபத்து குறிப்பாக மண் ரோட்டில் நடந்ததாக சொல்லவில்லை என்றால் ஆமாம். முதல் உதவி செய்த கோகுல் பாலிகிளினிக் மருத்துவரை நீங்கள் தான் விசாரித்து வாக்குமூலம் பெற்றிர்கள் என்றால் இல்லை. அதில் அடிபட்ட நபர் அழைத்து வந்த நபரை ஆம்புலன்ஸ் சரவணன் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்று உள்ளது என்றால் ஆமாம் குறிப்பாக விபத்தை நேரில் கண்ணுற்றதாக சொல்லப்பட்ட அரவிந்தன் என்பவர் அழைத்து வந்ததாக இல்லை என்றால் ஆமாம்
3. விபத்தில் அடிபட்டு இறந்து போன நபரின் வீடு எங்கு உள்ளது என தெரிந்து கொண்டீர்களா என்றால் ஆமாம் பாலப்பம்பட்டி கோவிலை ஒட்டி வடபுறமாக ஊருக்குள் சென்றால் தான் அவர்கள் வீட்டிற்கு செல்ல இயலும் என்றால் சரிதான் ஆனால் ரோட்டை தாண்டி கிழபுறமாக சென்டரல் இருக்கு பேங்க எதிரில் வர அவசியம் இல்லை என்றால் சரிதான், அவர்கள் வீட்டிற்கு செல்ல சென்டல் பேங்க் செல்ல வேண்டி அவசியம் இல்லை என்றால் ஆமாம். புகாரில் விபத்து குறிப்பாக மண்ரோட்டில் நடந்ததாக இல்லை என்றால் சரிதான். புகாரில் விபத்து ஏற்படுத்தியவர் அவரது பாதையை விட்டு

மண்ரோட்டில் சென்று விபத்து ஏற்படுத்தி கொள்ளவில்லை என்றால் சரிதான். இந்த விபத்தானது கோயில் பூசாரியான இறந்து போன நபர் மேற்கிலிருந்து கிழக்காக நடந்து சென்று எதிர் புறம் உள்ள பேங்கை அடைவதற்காக வடக்கிலிருந்து இதற்காக பின்னால் வரும் வாகனத்தை கவனிக்காமல் திடீரென ரோட்டை கடந்து தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்தை நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் ரத்தக்கரை புரோட்டின் டயர் மார்க்ஸ் காணப்படுவதாக வரைபடத்தில் காட்டப்படவில்லை என்றால் ஆமாம்.

4. சம்பவ இடத்தை யார் அடையாளம் காட்டினார்கள் என்ற விபரம் பார்வை மகசரிலோ வாக்குமூலங்களிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். நஷ்ட ஈடு பெறுவதற்காக தவறாக கொடுக்கப்பட்ட தவறான புகாரை பெற்று சரிவர விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு அதன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளிர்கள் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு எதிரியின் அஜாக்கிரதையோ, கவனக்குறைவோ காரணமில்லை என்றால் சரியல்ல. இறந்தவரின் அஜாக்கிரதையோ, கவனக்குறைவு காரணம் என்றால் சரியல்ல. சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் விபத்து எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com.B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.